# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2086/13 - 2018 අගෝස්තු මස 28 වැනි අඟහරුවාදා - 2018.08.28

*2086/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 44(1) ஆம் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சருக்கான விடயத் துறைகள் மற்றும் அலுவல்களை ஒப்படைத்தல் சம்பந்தமாக, இங்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென அரசியல் யாப்பின் 44(5) ஆம் சட்டத்தின் பிரகாரம் இத்தால் அறிவிக்கிறேன்.

ஜோன் ஈ. அமரதுங்க,
சுற்றுலா அபிவிருத்தி மற்றும்
கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்.

2018, ஓகத்து 23.

**அட்டவணை**

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

| கடமைகளும் செயற்பாடுகளும் | திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகளாக இயங்குகின்ற நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் | செயல்படுத்தப்படும் சட்டங்கள் |
|---|---|---|
| 1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழான செயலாக்கம், கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக அமைச்சருடன் ஆலோசனை மேற்கொள்ளல். | | |


1A - G 28369 — 367 (2018/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்*

| *கடமைகளும் செயற்பாடுகளும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகளாக இயங்குகின்ற நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயல்படுத்தப்படும் சட்டங்கள்* |
|---|---|---|
| 2. நாடளாவிய ரீதியில் சட்ட விரோதமான முறையில் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளோரினது முறைசாரா வகையிலான முன்மொழியப்பட்ட பதிவுச் செயன்முறையின் வெற்றியினை உறுதி செய்தல். (உதாரணம் : ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், மதுபானச்சாலைகள், பயண வழிகாட்டிகள் போன்றன) இதன் மூலம் இவற்றைச் சாதாரண நிறுவனங்களாகக் கொண்டு வருதலும் இச்செயன்முறையை இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அவதானித்தலும். | | |
| 3. உள்ளக சுற்றுலா செயற்பாட்டின் மற்றும் உள்ளூர் விளம்பர நிகழ்ச்சிகளின் முன்னேற்றத்தின் மீளாய்வும் கண்காணிப்பும். | | |
| 4. கிறிஸ்தவ சமய விவகாரங்கள் தொடர்பாக பிரதேச ரீதியான செயலாக்கம், கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல். | | |
| 5. சுற்றுலாப் பயணிகளின் ஹோட்டல்கள், பயண வழிகாட்டிகள் மற்றும் ஹோட்டல்களை வகைப்படுத்தல்களின் அவசியம் தொடர்பான விடயங்களின் அபிவிருத்தியும், கட்டுப்பாடும். | | |
| 6. உறுதியான உற்பத்தித் திறனை மீளாய்தல், கண்காணித்தல், மதிப்பிடல் தொடர்பாக இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன் நெருங்கிய தொடர்பைப் பேணுதல். | | |
| 7. சுற்றுலா அமைச்சிலுள்ள மனித வளத்தின் பயிற்சிகள் தொடர்பான விடயங்கள். | | |
| 8. அமைச்சினுடைய குறிப்பாக இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினுடைய விவகாரங்கள், நடவடிக்கைகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் சிறந்த முறையில் தெரிந்து வைத்திருத்தல். | | |
| 9. இலங்கைச் சுற்றுலாத்துறையின் மூலோபாய செயல் திட்டத்தினை இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடனும் அதன் அணியுடனும் இணைந்து முன்னெடுத்தல். | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே, சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்*

| கடமைகளும் செயற்பாடுகளும் | திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகளாக இயங்குகின்ற நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் | செயல்படுத்தப்படும் சட்டங்கள் |
|---|---|---|
| 10. இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் வருகின்ற சுற்றுலா விடுதிகள், சுற்றுலா வலயங்கள் மற்றும் சுற்றுலா அம்சங்களைத் தொழில் முறையாகச் சிறப்பாகப் பேணுதல்.<br><br>11. உரிய சந்தர்ப்பங்களில் என்னால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளும், செயற்பாடுகளும். | | |

09-270

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.